# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2023.04.03 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் (திருத்தம்)

**2018 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல்**
**சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அவர்களால்
பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, உள்நாட்டு வானூர்திமூலம் ஏற்றிச்செல்வதற்கான பொறுப்பின் வரையறைகளை அமைச்சர் குறித்துரைப்பதற்கு ஏற்பாடு செய்வதாகும்; இதன்மூலம், சர்வதேச வானூர்திமூலம் ஏற்றிச்செல்வதற்கான பொறுப்பின் வரையறைகளுக்கு ஏற்புடையற்பாலதான உச்சவரம்பெல்லையானது உள்நாட்டு வானூர்திமூலம் ஏற்றிச்செல்லுதலுக்கு ஏற்புடையற்பாலதாக மாட்டாது.*

# வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் (திருத்தம்)

ச. வ.- ஓ. 33/2022

## 2018 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வானூர்திமூலம் ஏற்றிச் செல்லல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2018 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2**. இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டின் 29 ஆம் இலக்க, வானூர்திமூலம் ஏற்றிச்செல்லல் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

> "(3) அமைச்சர், காலத்துக்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், சர்வதேச வானூர்திமூலமான ஏற்றிச்செல்லுதலாகவிராத, வானூர்திமூலம் ஏற்றிச் செல்லுதலுக்கு ஏற்புடையற்பாலதாக இருக்கக்கூடியவாறான பொறுப்பின் வரையறைகளைக் குறித்துரைக்கலாம்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கிநிற்றல்*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.